டிஜிட்டல் டெய்லி
# அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 31.03.2026 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 233 - Madurai | Online Edition

# நாட்டிலுள்ள அனைத்து பங்க்-களிலும் போதுமான அளவு பெட்ரோல், டீசல் கையிருப்பு உள்ளது : மத்திய அரசு




புது தில்லி, மார்ச் 30

நாட்டிலுள்ள அனைத்து பங்க்-களிலும் போதுமான அளவு பெட்ரோல், டீசல் கையிருப்பு உள்ளதாக மத்திய அரசு விளக்கம் அளித்துள்ளது.

தட்டுப்பாடு இருப்பதாக பரவும் வதந்திகளை நம்ப வேண்டாம் என்றும், சுமார் 94,000 மெட்ரிக் டன் சரக்குடன் 2 LPG கியாஸ் கப்பல்கள், இந்தியாவை நோக்கிப் பாதுகாப்பாக வந்து கொண்டிருப்பதாகவும் கூறியுள்ளது.



# மாவட்ட வேளாண்மைத் துறை அதிகாரிகளால் உழவர் நல சேவை மையம் ஆய்வு செய்யப்பட்டது



அரியலூர், மார்ச் 30

அரியலூர் மாவட்டத்தில் தமிழக முதல்வரால் தொடங்கி வைக்கப்பட்ட வேளாண்மை படிப்பு, தோட்டக்கலை படிப்பு, படித்த பட்டதாரிகளுக்காக உழவர் நல சேவை மையம் தொடங்கப் பட்டது.

இதன்படி அரியலூர் மாவட்டத்தில் 12 உழவர் நல சேவை மையம் தொடங்கப்பட்டது. அதில் திருமானூர் வட்டாரத்தில் உள்ள ஏலாக்குறிச்சி மற்றும் அரியலூர் வட்டாரத்தில் அரியலூர் உழவர் நல சேவை மையத்தை வேளாண்மை இணை இயக்குனர் உலகம்மை முருகக்கனி வழிகாட்டுதலின்படி, வேளாண்மை துணை இயக்குனர் வேளாண்மை வணிகம் பச்சையம்மாள், வேளாண்மை உதவி இயக்குனர் தர கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் மற்றும் வேளாண்மை உதவி இயக்குனர் பரமசிவம் மற்றும் வேளாண்மை அலுவலர் சிந்துஜா ஆகியோர் ஆய்வு செய்தனர்.

ஆய்வின் போது உழவர் நல சேவை மையம் மூலம் விவசாயிகளுக்கு எவ்வளவு இடுபொருள் விற்பனை செய்யப்பட்டது. எவ்வளவு இடுபொருள் இருப்பில் உள்ளது மற்றும் அனைத்து பதிவேடுகளும் ஆய்வு செய்யப்பட்டது. உழவர் நல சேவை மையத்தை எவ்வாறு தொழில்நுட்பத்துடன் செயல்படுத்த வேண்டும் என்பதை பற்றியும், விவசாயிகளுக்கு தேவையான காலங்களில் பயன்படும் வகையில், இடுபொருள்களான உரங்கள், விதைகள், பூச்சி மருந்துகள் மற்றும் விவசாய தொழில் நுட்பங்களை விவசாயிகளுக்கு, தொழில்நுட்பத்துடன் அதிக அளவு இயற்கை வேளாண்மை பற்றியும், இயற்கையை

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

உரங்கள் பயன்பாடு பற்றியும், உயிர் உரங்கள் பயன்பாடு பற்றியும், சுழற்சி பற்றியும், ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகம், ஒருங்கிணைந்த உரம் நிர்வாகம், ஒருங்கிணைந்த களை மேலாண்மை, ஒருங்கிணைந்த அறுவடை பின் செய் நேர்த்தி தொழில்நுட்பத்துடன், ஆலோசனைகள் வழங்கி விவசாயிகளின் இடுபொருள் செலவை குறைத்து, அதிக வருமானம் பெரும் வகையில் செயல்பட வேண்டும். மண் மற்றும் பாசன நீர் ஆய்வு செய்திட உதவுதல், உழவர் கடன் அட்டை மற்றும் பயிர் கடன் பெற உதவி செய்தல், மாடி தோட்டம், காளான் பண்ணை மற்றும் மண்புழு உரம் தயாரிக்க உதவி செய்தல் மற்றும் ட்ரோன் சேவைகள் செய்து, விவசாயிகள் பயனடையுமாறு செய்ய வேண்டும் என்று என்று வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு டாக்டர் ராதாகிருஷ்ணன் கேட்டுக்கொண்டார்.

# வெயில் அதிகரிப்பால் நுங்கு விற்பனை படுஜோர்

தர்மபுரி, மார்ச் 30

தர்மபுரியில், வெயில் அதிகரிப்பால் நுங்கு விற்பனை படுஜோராக நடந்து வருகிறது.

தர்மபுரி மாவட்டத்தில், கடந்த இரண்டு மாதமாக கோடை வெயில் கடுமையாக வாட்டி வருகிறது. இதனால், பகல் நேரங் களில் வெளியில் வராமல், பொதுமக்கள் வீடுகளிலேயே முடங்கினர்.

தங்களின் உடல் சூட்டை தணிக்க, பழ வகைகள், இயற்கை குளிர்பானங்களை பருகுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். தர்மபுரி மாவட்டத்திற்கு சேலம் மாவட்டம் மேச்சேரி, மேட்டூர் பகுதிகளில் இருந்து நுங்கு விற்பனைக்கு அதிகம் கொண்டு வரப்படுகிறது.

இந்நிலையில், தர்மபுரி மாவட்டத்தில் குறைந்த அளவிலான வியாபாரிகளே நுங்கு விற்பனை செய்கின்றனர். நடப்பாண்டில் 6 நுங்குகள் ரூ.50க்கு விற்பனை செய்யப்படுகிறது. கடந் தாண்டு 3 நுங்குகள் ரூ.20க்கு விற்பனையானது. கோடை வெப்பத்தை தணிக்கை தர்பூசணி, நுங்கு, வெள்ளரிக்காய், முலாம்பழம் உள்ளிட்டவைகளை பொதுமக்கள் வாங்கி சாப் பிட்டு உடல் சூட்டை தணித்து வருகின்றனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# அடுப்பில்லா சமையல்

அடுப்பில்லா சமையல் (Fireless Cooking) என்பது தற்கால நவீன மற்றும் ஆரோக்கியமான உணவு முறைகளில் முக்கிய இடத்தைப் பிடித்து வருகிறது. இது வெறும் சமையல் முறை மட்டுமல்ல, ஒரு ஆரோக்கியமான வாழ்க்கை முறை சார்ந்த அணுகுமுறையாகவும் பார்க்கப்படுகிறது.

இது குறித்து உணவியல் நிபுணர்கள் மற்றும் ஆய்வாளர் களின் கருத்துக்களையும், அதன் சிறப்புகளை விரிவாகக் காணலாம்.

**1. அடுப்பில்லா சமையல் ஏன் தேவை?**

நவீன காலத்தில் நாம் உண்ணும் பல உணவுகள் அளவுக்கு அதிகமாகச் சமைக்கப்படுவதாலும், எண்ணெயில் பொரிக்கப் படுவதாலும் அவற்றின் சத்துக்கள் (Nutrients) மற்றும் நொதிகள் (Enzymes) அழிக்கப்படுகின்றன.

**ஆற்றல் சேமிப்பு :** எரிபொருள் (Gas/Electricity) செலவு மற்றும் நேரம் மிச்சமாகிறது.

**அவசர கால உணவு முறை :** மின்சாரம் அல்லது எரிபொருள் கிடைக்காத இயற்கை பேரிடர் போன்ற சூழல்களில், உயிர்வாழத் தேவையான உணவை சமைக்க இதுவே சிறந்த வழி.

**நவீன நோய்கள் :** உடல் பருமன், நீரிழிவு, இதய நோய்கள் போன்ற 'வாழ்க்கை முறை நோய்கள்' (Lifestyle Diseases) அதிகரித்துள்ள சூழலில், இயற்கையான மற்றும் சத்துமிக்க உணவுகளை உட்கொள்ள இது உதவுகிறது.

தொகுப்பு : **G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.**



# நவீன வேளாண்மையில் அமிர்தங்களும் அஸ்திரங்களும்

## ஒரு ஏக்கர் நிலத்திற்கு ஜீவாமிர்தம் தயாரித்தல்

தண்ணீர் 200 லி, நாட்டுப்பசு மாட்டுச்சாணம் 10 கிலோ, நாட்டுப்பசு சிறுநீர் 5 முதல் 10 லி கிடைக்கும் அளவைப் பொறுத்து, வெல்லம் 2 கிலோ ஏதேனும் ஒரு பயறு மாவு (முளை கட்டிய பயறை காய வைத்து மாவாக்கிப் பயன்படுத்தினால் மிக நல்லது) 2 கிலோ ஜீவானமிர்தத்தை தெளிக்கப்போகும் நிலத் தின் ஒரு கைப்பிடி மண், இவற்றை ஒரு தொட்டியில் விட்டு நன்றாகக் கலக்க வேண்டும். அலுமினிய தொட்டியை, பாத்தி ரங்களைப் பயன் படுத்தக்கூடாது. அதே போல் பயறு அல்லது பருப்பு மாவை மட்டுமே பயன்படுத்த வேண்டுமே தவிர எண்ணெய் வித்துக்களான நிலக்கடலை மற்றும் சோயாமாவை கண்டிப்பாக சேர்க்கக்கூடாது.

இவையனைத்தையும் தொட்டியில் விட்டு கடிராக முள் சுற்றும் முறையில் தினமும் 3 முறை 3 நாட்களுக்கு கலக்க வேண்டும். 3 முறை என்பது காலை, மதியம், மாலை என இருக்கலாம். இவற்றை நிழில்ல வைத்தே கலக்க வேண்டும். ஒரு கிராம் மண்ணில் 5 லட்சம் கோடிக்கும் அதிகமான நுண்ணுயிரிகள் இருப்பதாகக் கூறப்படுகிறது. நாம் ஜீவாமிர்தக் கரைசலில் பயன்படுத்திய மண்ணில் இந்த 3 நாட்களில் ஒவ்வொரு 20 நிமிடத்திற்கும் இருக்கும் நுண்ணுயிரிகளின் அளவு அப்படியே இருமடங்காகப் பெருகும். இவ்வாறு நுண்ணுயிரிகளின் அளவு அப்படியே இருமடங்காகப் பெருகும். இவ்வாறு நுண்ணுயிரிகள் பெருகிய கலவையை மண்ணில் தெளிப்பதால் பயிர்களை எந்த நோயும் தாக்க முடியாது.

இந்த ஜீவாமிர்த கரைசலை தயாரித்த 4-ம் நாள் நிலத்தில் நீர் பாய்ச்சும் போது, கலந்துவிட வேண்டும். இந்தக் கரைசலை அவரவர் வசதிக்கேற்ப மாதம் ஒருமுறையோ, 15 நாட்களுக்கு ஒரு முறையோ தயாரித்துப் பயன்படுத்தலாம். 3 நாட்களுக்கு மேல் வைத்திருக்கக் கூடாது. இவையனைத்தையும் தொட்டியில் விட்டு கடிராக முள் சுற்றும் முறையில் தினமும் 3 முறை 3 நாட்களுக்கு கலக்க வேண்டும். 3 முறை என்பது காலை, மதியம், மாலை என இருக்கலாம். இவற்றை நிழலில் வைத்தே கலக்க வேண்டும். ஒரு கிராம் மண்ணில் 5 லட்சம் கோடிக்கும் அதிகமான நுண்ணுயிரிகள் இருப்பதாகக் கூறப்படுகிறது. நாம் ஜீவாமிர்தக் கரைசலில் பயன் படுத்திய மண்ணில் இந்த 3 நாளில் ஒவ்வொரு 20 நிமிடத்திற்கும் இருக்கும் நுண்ணுயிரிகளின் அளவு அப்படியே இருமடங்காகப் பெருகும்.

,வ்வாறு நுண்ணுயிரிகள் பெருகிய கலவையை மண்ணில் தெளிப்பதால் பயிர்களை எந்த நோயும் தாக்க முடியாது. இந்த ஜீவாமிர்த கரைசலை தயாரித்த 4ம் நாள் நிலத்தில் நீர் பாய்ச்சும் போது, கலந்து விட வேண்டும். இந்தக் கரைசலை அவரவர் வசதிக்கேற்ப மாதம் ஒருமுறையோ, 15 நாட்களுக்கு ஒரு முறையோ தயாரித்துப் பயன்படுத்தலாம். 3 நாட்களுக்கு மேல் வைத்திருக்கக்கூடாது.

**கனஜீவாமிர்தம் தயாரித்தல்**

நாட்டுப்பசு மாட்டுச்சாணம் 100கி, வெல்லம் 2 கி, பருப்பு அல்லது பயறு மாவு 2 கிலோ, ஒரு கைப்பிடி நிலத்தின் மண் இவை அனைத்தையும் கலக்கத் தேவையான அளவு நாட்டுப்பசு மாட்டுச் சிறுநீர். இவைகளை ஒரு தொட்டியில் கலந்து நிழலான பகுதியில் வைத்து கடிகார முறையில் கலக்க வேண்டும். இவைகளை கலக்கிய பிறகு நெல், கம்பு, கேழ்வரகு, நிலக்கடலை, கடுகு, எள், சோள்ம், சோயா மற்றும் உளுந்து ஆகியவற்றிற்கு ஒரு மாதத்திற்குப் பிறகு பயன்படுத்தலாம். இதை மாதம் ஒரு முறை பயன்படுத்த வேண்டும்.

மேலே குறிப்பிட்டுள்ள பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு முதலாவது மாதம் 100 லி தண்ணீரில் 3 லி கனஜீவாமிர்தத்தை கலந்து தெளிக்க வேண்டும். 2வது தெளிப்பிற்கு ஏக்கர் ஒன்றுக்கு 150லி தண்ணீரில் 10லி கன ஜீவாமிர்தத்தைக் கலந்து தெளிக்கலாம். 3வது தெளிப்பிற்கு ஏக்கருக்கு 200லி தண்ணீரில் 20 லி கனஜீவாமிர்தம் கலந்து தெளிக்கலாம். கடைசி தெளிப்பிற்கு 200லி தண்ணீரில் 20 லி. கன ஜீவாமிர்தத்தோடு 5 லி புளித்த மோரையும் கலந்து தெளிக்க வேண்டும்.

6 மாத பயிர்களான மிளகாய், கத்தரி மற்றும் தக்காளிக்கு முதல் தெளிப்பிற்கு 100லி. தண்ணீரில் 5லி கனஜீவாமிர்த்தையும், 2வது தெளிப்பிற்கு 150லி தண்ணீரில் 10லி கன ஜீவாமிரத்தையும் கலந்து தெளிக்கலாம். 3வது தெளிப்பிற்கு 200 லிட, தண்ணீரில் 20 லி கனஜீவாமிர்தத்தை கலந்து தெளிக்கலாம். 4வது தெளிப்பிற்கு 200 லி தண்ணீரில் 5 லி புளி;த்த மோரைக் கலந்து தெளிக்கலாம். 5வது தெளிப்பிற்கு பாசிப்பயறு 100 கிராம், உளுந்து 100 கிராம், தட்டைப்பயறு 100 கிராம், எள் 100கிராம், கொள்ளு 100 கிராம், நாட்டுக் கோதுமை 100 கிராம் மற்றும் துவரைப் பருப்பு 100 கிராம் ஆகியவற்றை விழுதாக அம்மியில் அரைத்து அதனுடன் 200லி தண்ணீர் கலந்து அதோடு 10 லி மாட்டு சிறுநீரையும் கலந்து கடிகார முறையில் கலக்கி 24 மணி நேரத்திற்குப் பிறகு தெளிக்க வேண்டும்.

கரும்பு, வாழை, பப்பாளி மற்றும் அனைத்து ஆண்டுப் பயிர்களுக்கும் மாதத்திற்கு ஒருமுறை கனஜீவாமிர்தத்தைத் தெளிக்கலாம். முதல் தெளிப்பிற்கு 100 லி. தண்ணீரில்5 லி கன ஜீவாமிர்தத்தைக் கலந்து தெளிக்கலம்.

இவ்வாறு கன ஜீவாமிர்தக் கரைசலை பயன்படுத்துவதால் மண்ணில் நுண்ணுயிரிகள் பெருகுவதோடு, பயிர்களுக்குத் தேவையான பல்வேறு சத்துக்களும் கிடைக்கின்றன.

தகவல் ; ***T.யுவராஜ் தட்சிணாமூர்த்தி, வேளாண்மைப் பொறியாளர், உடுமலைப்பேட்டை.***



# QS தரவரிசை 2026

# TNAU-வின் மகத்தான வெற்றி

கோயம்புத்தூர், மார்ச் 30

QS உலகப்பல்கலைக்கழகத் தர வரிசைகள் (QS World University Rankings) என்பவை, பிரிட்டிஷ் கூட்டரசினைச் சேர்ந்த உயர்கல்விப் பகுப்பாய்வு நிறுவனமான 'Quacquarelli Symonds' மூலம் தொகுக்கப்படும், கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழகங்களின் ஒப்பீட்டுத் தரவரிசைகளின் தொகுப்பாகும்.

QS-இன் தரவரிசைத் தொகுப்பானது, 2011-ஆம் ஆண்டு முதல் QS உலகப் பல்கலைக்கழகத் துறைசார் தரவரிசைகள்' (வேளாண்மை மற்றும் வனவியல்) என்ற பிரிவாக விரிவு படுத்தப்பட்டுள்ளது. QS உலக பல்கலைக்கழக தரவரிசை 2026 இல், மொத்தம் 6,273 நிறுவனங்கள் கலந்து கொண்டனர், அவற்றில் 1,908 அதிகாரப்பூர்வமாக 55 வெவ்வேறு கல்வித் துறைகளில் தர வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் (TNAU) கடந்த நான்கு ஆண்டுகளில் QS உலக பல்கலைக்கழக துறை சார்தர வரிசையில் (வேளாண்மை மற்றும் வனவியல்) 2023 ஆம் ஆண்டில் 401-420 என்ற வரிசையில் இருந்து 2026 ஆம் ஆண்டில் 201 -250 ஆக உயர்ந்துள்ளது.

'QS உலகப் பல்கலைக்கழகத் துறைசார் தரவரிசைகள் 2026' (வேளாண்மை மற்றும் வனவியல்) பிரிவின் கீழ், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் (TNAU), வேளாண்மை மற்றும் வனவியல் துறையில் உலக அளவில் 201 -250 என்ற தர வரிசைப் பிரிவில் இடம் பிடித்து, ஒரு குறிப்பிடத்தக்க சாதனையைப் படைத்துள்ளது.

TNAU-வின் இந்தச் சிறப்பான செயல்பாடு, பிராந்திய, தேசியமற்றும் சர்வதேச அளவுகளில் கற்பித்தல், ஆராய்ச்சி, விரிவாக்கப் பணிகள், வேளாண் வணிகம் மற்றும் திறந்த மற்றும் தொலைதூரக் கல்வி (ODL) சார்ந்த செயல்பாடுகளில் அது கொண்டுள்ள அர்ப்பணிப்பின் விளைவாகும். பல்கலைக் கழக விஞ்ஞானிகளின் அயராத முயற்சிகளின் பயனாக, விவசாயச் சமூகம் மற்றும் பிற பங்கு தாரர்களின் தேவைகளைப்

பூர்த்தி செய்யும் வகையில், 948 பயிர் இரகங்கள்/கலப்பினங்கள், 171 பண்ணை இயந்திரங்கள்/கருவிகள் மற்றும் 1,500-க்கும் மேற்பட்ட மேலாண்மைத் தொழில்நுட்பங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த சர்வதேசத் தர வரிசையில் பல்கலைக்கழகம் பெற்ற சிறப்பான இடத்திற்குத் தங்கள் அர்ப்பணிப்பு மற்றும் மிகச்சிறந்த செயல்பாடுகள் மூலமாக அமைந்த பேராசிரியர்கள், பணி யாளர்கள் மற்றும் மாணவர்களைத் துணைவேந்தர் பாராட்டி னார். மேலும், வரும் ஆண்டுகளில் பல்கலைக்கழகம் மிக உயர்ந்த இடத்தைப் பிடிக்க வேண்டும் என்றும் அவர்களை ஊக்கப் படுத்தினார்.

# நடப்பாண்டில் 5 ஆயிரம் ஹெக்டேர் மஞ்சள் சாகுபடி அதிகரிப்பு

ஈரோடு, மார்ச் 30

ஈரோடு மாவட்டத்தில் கடந்த 3 ஆண்டுகளாக விலை நிலையாக நீடிப்பதால், நடப்பாண்டில் சுமார் 5000 ஹெக்டேர் மஞ்சள் சாகுபடி அதிகரித்துள்ளதாக விவசாயிகள் தெரிவித் தனர்.

தமிழ்நாட்டில் 1.60 லட்சம் ஏக்கரில் மஞ்சள் பயிரிடப்படுகிறது. இதில் 30 சதவீதத்துக்கும் மேல் ஈரோடு மாவட்டத்தில் பயிரிடப்படுகிறது. தமிழ்நாட்டில் ஆண்டுக்கு 7 லட்சம் மூட்டைகள் வரை மஞ்சள் உற்பத்தியாகும் நிலையில், ஈரோடு மாவட்டத்தில் மட்டும் 2 லட்சம் மூட்டைகள் உற்பத்தியாகின்றன.

தெலுங்கானா மாநிலம் நிஜாமாபாத், மகாராஷ்டிர மாநிலம் சாங்கிலி, தமிழகத்தில் ஈரோடு என இந்தியாவில் 3 இடங்களில் தான் தேசிய அளவில் தரமான மஞ்சள் சந்தை உள்ளது. புவிசார் குறியீடு பெற்றுள்ள ஈரோடு மஞ்சளில், 3 சதவீதம் முதல் 5 சதவீதம் வரை குர்குமின் அளவு உள்ளது. ஈரோடு மாவட்டத்தில் 2015ல் 8,912 ஹெக்டேராக இருந்த மஞ்சள் சாகுபடி, 2016-ல் 2,966 ஹெக்டேராக குறைந்தது. இதன் பின்னர் 2017ல் 8,988 ஹெக்டேராக அதிகரித்த மஞ்சள் சாகுபடி, 2018ல் 5,625 ஹெக்டேராகவும், 2019ல் 4,319 ஹெக்டேராகவும், 2020, 2021, 2022 வரை சுமார் 3,500 முதல் 4,000 ஹெக்டேர் வரையும் சாகுபடி செய்யப்பட்டது.

தொடர்ந்து 12 ஆண்டுகளாக மஞ்சள் சராசரியாக குவிண்டால் ரூ.5,000 முதல் ரூ.6,000 வரை விலை போனது. மஞ்சள் விலை கடந்த இரண்டு ஆண்டுகளாக ரூ.10,000க்கும் குறையாமல் உள்ளதால் மஞ்சள் நடவில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். கடந்த ஆண்டை காட்டிலும் நடப்பாண்டில் மஞ்சள் சாகுபடி அதிகரித்துள்ளது.

இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது : கடந்த 12 ஆண்டுகளுக்கு பிறகு 2023 ஜூலை மாதத்தில் மஞ்சள் விலை குவிண்டாலுக்கு ரூ.10 ஆயிரத்துக்கு மேல் விற்பனையானது. 2024-ல் ரூ.21,000 வரை விற்பனையானது. கடந்த இரண்டு ஆண்டுகளாக சராசரியாக குவிண்டால் ரூ.12 ஆயிரம் வரை விற்பனையானது.

மஞ்சள் விலை நிலையாக நீடிப்பதால் விவசாயிகள் மஞ்சள் சாகுபடிக்கு அதிக ஆர்வம் காட்டுகின்றனர். கடந்த ஆண்டில் 4,000 ஹெக்டேர் அளவுக்கு இருந்த மஞ்சள் சாகுபடி பரப்பு, நடப்பாண்டில் 5,000 ஹெக்டேர் அளவுக்கு அதிகரித்துள்ளது. கொடுமுடி, மொடக்குறிச்சி, அந்தியூர், பவானி, கோபி, சத்தியமங்கலம் போன்ற பகுதிகளில் மஞ்சள் சாகுபடி அதிகரித்துள்ளது.

மேற்குத் தொடர்ச்சி மலையில் பெய்த நல்ல மழை, பவானிசாகர் அணை நிரம்பி தொடர்ந்து 4 ஆண்டுகளாக அணையில் இருந்து குறிப்பிட்ட காலத்தில் தண்ணீர் திறக்கப்பட்டதும் மஞ்சள் சாகுபடிக்கு சாதகமான சூழலை ஏற்படுத்தி உள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

**முறையாக தலைக் கவசம் அணிவோம்**




கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# நலிவுற்ற வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களை மேம்படுத்திட என்ன வழிகள் தெரியுமா?




தமிழகத்தில் கிராமப்புற விவசாயிகளின் வாழ்வாதாரம் உயர்வுக்காக கூட்டுறவுத் துறையின் கீழ் 4473 (PACS) தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் உள்ளன என்பது நாம் அறிந்ததே. இந்த சங்கங்கள் ரேசன் கடை (PDS) நடத்தவதுடன் மட்டுமல்லாது பயிர்கடன் (CROP LOAN) போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது. இந்த சங்கங்கள் அடிமட்ட அளவிலான கூட்டுறவு நிறுவனமாகும். இந்த சங்கங்கள் நாடு முழுவதும் மத்திய அரசால் கணினிமயமாக்கல் செய்யப்பட்டுள்ளது. இது போன்ற பணிகளை மேற்கொண்டு வந்தாலும் பல சங்கங்கள் நஷ்டத்தில் செயல் படுகின்றன என்றால் ஆச்சரிய மாக இருக்கிறது. அவற்றின் நிதி நிலை மேம்படுத்த என்ன வழிகள் மேற்கொள்ளலாம் என்பதை பார்க்கும் முன் தமிழகத்திலுள்ள கூட்டுறவு கடன் சங்கங்களின் செயல்பாடுகளை தெரிந்து கொள்ளுவோம்.

**தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் (PRIMARY AGRICULTURAL COOPERATIVE BANK)?**

தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் வேளாண் சார்ந்த கடன்கள் வழங்குவது உள்ளிட்ட பல்வேறு சேவைகளை வழங்குவதை முதன்மையான நோக்கமாக கொண்டு செயல்பட்டு வருகின்றன. இருந்த போதிலும் சங்கத்தின் நிலையான வளர்ச்சிக்கும் நிதி நிலைமை மேம் படுத்தவதற்கும் அனைத்து சங்கங்களும் குறைந்த பட்சமாக 5 அல்லது அதற்கு மேற்பட்ட சேவைகளை கிராமப்புற விவசாயி களுக்கு வழங்கிட வேண்டுமென கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் தெரிவிக்கிறார்.

**அவை என்னென்ன?**

1) இ- சேவை மையம் (E- SEVA CENTRE)

2) வங்கி சார்ந்த சேவைகள் (BANKING ACTIVES)

3) உரம் மற்றும் விதை இடுபொருள் விற்பனை மையம் (INPUT SHOP)

4) பாதுகாப்பு பெட்டக வசதி (LOCKER FACILITIES)

5) வேளாண் இயந்திரங்கள் மற்றும் பண்னணை கருவிகள் வாடகை மையம் (CUSTOM HERRING CENTRE)

6) விளைப்பொருட்களை இருப்பு வைக்க கிட்டங்கி வசதி (GODOWN FACILITIES)

7) கூட்டுறவு மருந்தகம் (COOPERATIVE MEDICAL SHOP)

8) எரிபொருள் விற்பனை (FUEL SALS).

இதுபோன்ற 25க்கு மேற்பட்ட சேவைகள் இருந்தாலும்கூட அனைத்து சங்கங்களும் குறைந்த பட்சமாக 5 சேவைகளை வருகிற ஜூன் 30க்குள் தங்களுடைய வங்கியில் செயல் படுத்தப்பட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதுபோன்ற சேவைகளை மேற்கொண்டால் சங்கங்கங்கள் நலிவுறாமல் தங்களுடைய சொந்த காலில் நிற்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**



# உயிருக்கு ஆபத்தான 3 சத மஞ்சள் பாஸ்பரஸ் ரேட் டால் எனப்படும் எலி விசம் விற்பனை செய்யக் கூடாது

## வேளாண்மை இணை இயக்குநர் எச்சரிக்கை

புதுக்கோட்டை, மார்ச் 30

புதுக்கோட்டை மாவட்டத்தில் அனைத்துக் கடைகளிலும் எலி விசம், கரப்பான் கொல்லிகள், கொசுவிரட்டி போன்ற வீட்டுப் பயன்பாட்டுப் பூச்சிக்கொல்லிகளை விற்பனை செய்யவும், இருப்பு வைக்கவும் பூச்சிக்கொல்லி விற்பனை உரிமம் அவசியம் எனவும், உரிமம் இல்லாமல் விற்பனை செய்யும் விற்பனையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனப் புதுக்கோட்டை வேளாண்மை இணை இயக்குநர் மு. சங்கர லட்சுமி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்து உள்ளதாவது, புதுக்கோட்டை மாவட்டத்தில் பெட்டிக்கடைகள், மளிகைக் கடைகள், பேரங்காடிகள் போன்றவற்றில் எலி விசம், கரப்பான் கொல்லிகள், கொசுவிரட்டிகள் போன்ற வீட்டில் பயன் படுத்தும் பூச்சிகொல்லிகள் ஆகியவற்றை விற்பனை உரிமம் பெறாமல் விற்பனை செய்யப்படுவது பூச்சிக்கொல்லிச் சட்டம் 1968-இன்படி குற்றமாகும்.

எனவே, அனைத்துப் பெட்டிக்கடை, மளிகைக்கடை மற்றும் பேரங்காடிகளின் விற்பனையாளர்களும், உரிமம் பெற்று மேற்கண்ட பூச்சி கொல்லிகளை விற்பனை செய்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும், பூச்சிக்கொல்லிச் சட்டம் 1968-இன்படி உரிய பதிவேடுகளையும் ஆவணங்களையும் பராமரிப்பதோடு, விற்பனை செய்யும் பொழுது வாங்குபவரின் கையொப்பம் பெற்று உரிய பட்டியலை வழங்க வேண்டும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. பற்பசை வடிவில் விற்பனை செய்யப்படும் ரேட்டால் எனப்படும் 3 சத மஞ்சள் பாஸ்பரஸ் கொண்ட எலிக்கொல்லி விசம் தமிழக அரசால் அறிவிப்பு செய்யப்பட்டு முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது. இதனை விற்பனையாளர்கள் விற்பனை செய்யக்கூடாது, ஆய்வின் போது கண்டறியப்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கப்படுகிறது.

மேலும், விற்பனை நிலையங்களில் வீட்டில் பயன்படுத்தும் பூச்சிக் கொல்லிகளை உணவுப் பொருட்கள் அருகில் வைத்து விற்பனை செய்யாமல் தனியாக இருப்பு வைத்து விற்பனை செய்ய வேண்டும் எனவும், பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு மேற்கண்ட வீட்டுப் பயன்பாட்டுப் பூச்சிக்கொல்லிகளை விற்பனை செய்யக் கூடாது எனவும், இது குறித்த கூடுதல் விவரங்களுக்கு தங்கள் பகுதிக்கு அருகாமையில் உள்ள வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அவர்களை தொடர்பு கொண்டு உரிமம் பெற்றுக்கொள்ளலாம் எனவும் புதுக்கோட்டை வேளாண்மை இணை இயக்குநர், மு.சங்கரலட்சுமி தெரிவித்துள்ளார்.



# பப்பாளியின் பலம்
# வேதியியல் முதல் ஆரோக்கியம் வரை



பப்பாளி என்பது தென்னாசியாவில் மிகவும் பிரபலமான ஒரு பழமாகும். இதன் இனிமையான சுவை மட்டுமல்லாமல், அதில் உள்ள சத்துக்களும் உடல் நலத்திற்கு பல நன்மைகளை வழங்குகின்றன. இக்கட்டுரையில், பப்பாளியின் வேதியியல் அமைப்பு மற்றும் ஊட்டச்சத்து தரம் பற்றி விரிவாகப் பார்க்கலாம்.

## பப்பாளியின் வேதியியல் அமைப்பு

பப்பாளி பல முக்கிய வேதியியல் கூறுகளால் ஆனது. அவை உடலின் வளர்ச்சிக்கும் செயல்பாடுகளுக்கும் அவசியமானவை :

- **நீர் (Water) :** பப்பாளியில் சுமார் 85-90% வரை நீர் உள்ளது. இது உடலை ஈரப்பதமாக வைத்திருக்க உதவுகிறது.
- **கார்போஹைட்ரேட்டுகள் (Carbohydrates) :** இயற்கையான சர்க்கரைகள் (glucose, fructose) அதிகமாக இருப்பதால் உடனடி ஆற்றலை வழங்குகிறது.
- **நார்ச்சத்து (Dietary Fiber) :** செரிமானத்தை சீராக்கி மலச்சிக்கலைத் தடுக்கிறது.
- **புரதம் (Protein) :** அளவு குறைவாக இருந்தாலும் உடலின் அடிப்படை தேவைக்கு உதவுகிறது.
- **கொழுப்பு (Fat) :** மிகக் குறைவான அளவில் உள்ளது, எனவே உடல் எடையை கட்டுப்படுத்த விரும்புவோருக்கு ஏற்றது.

## உயிர்ச்சத்துகள் (Vitamins)

பப்பாளி பல முக்கிய வைட்டமின்களை கொண்டுள்ளது :

- **வைட்டமின் C :** நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது.
- **வைட்டமின் A (பீட்டா-கரோட்டீன்) :** கண் பார்வை மற்றும் தோல் ஆரோக்கியத்திற்கு உதவுகிறது.
- **வைட்டமின் E மற்றும் K :** செல்கள் பாதுகாப்பு மற்றும் இரத்த உறைதலுக்கு உதவும்.

**தாதுக்கள் (Minerals)**

- **பொட்டாசியம் (Potassium) :** இரத்த அழுத்தத்தை கட்டுப் படுத்துகிறது.
- மக்னீசியம் (Magnesium) : தசை மற்றும் நரம்பு செயல் பாட்டிற்கு உதவுகிறது.
- **கால்சியம் (Calcium) :** எலும்புகள் மற்றும் பற்கள் வலுவாக இருக்க உதவுகிறது.

**உயிரியல் செயற்பாட்டு கூறுகள் (Bioactive Compounds)**

- **பப்பைன் (Papain) :** இது ஒரு முக்கியமான என்சைம் ஆகும். புரதங்களை உடைக்க உதவுகிறது மற்றும் செரி மானத்தை மேம்படுத்துகிறது.
- **ஆன்டி-ஆக்ஸிடன்ட்கள் (Antioxidants) :** உடலில் உள்ள தீங்கு விளைவிக்கும் சுதந்திர மூலக்கூறுகளை (free radicals) நீக்க உதவுகின்றன.

**பப்பாளியின் ஊட்டச்சத்து தரம் (Nutritional Quality)**

பப்பாளி ஒரு "சூப்பர் பழம்" என்று அழைக்கப்படுவதற்கான காரணம் அதன் உயர்ந்த ஊட்டச்சத்து மதிப்பாகும் :

**1. செரிமான ஆரோக்கியம்**

பப்பைன் மற்றும் நார்ச்சத்து இணைந்து செரிமானத்தை சீராக்குகின்றன. வயிற்றுப் பிரச்சினைகளை குறைக்க உதவுகிறது.



**2. நோய் எதிர்ப்பு சக்தி**

அதிக அளவு வைட்டமின் C இருப்பதால் உடலை நோய்களிலிருந்து பாதுகாக்கிறது.

**3. இதய ஆரோக்கியம்**

பொட்டாசியம் மற்றும் ஆன்டி-ஆக்ஸிடன்ட்கள் இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தி இதய நோய் அபாயத்தை குறைக்கின்றன.

**4. கண் மற்றும் தோல் ஆரோக்கியம்**

வைட்டமின் A மற்றும் கரோட்டினாய்டுகள் கண் பார்வையை மேம்படுத்தி தோலை ஆரோக்கியமாக வைத்திருக்கின்றன.

**5. எடை கட்டுப்பாடு**

குறைந்த கலோரி மற்றும் அதிக நார்ச்சத்து காரணமாக உடல் எடையை குறைக்க உதவுகிறது.

**முடிவு**

பப்பாளி ஒரு சத்தான மற்றும் ஆரோக்கியமான பழமாகும். அதன் வேதியியல் அமைப்பு உடலுக்குத் தேவையான பல முக்கிய சத்துக்களை வழங்குகிறது.

தினசரி உணவில் பப்பாளியை சேர்த்துக்கொள்வது, உடல் நலத்தை மேம்படுத்தவும் பல நோய்களைத் தடுக்கவும் உதவும். இந்த காரணங்களால், பப்பாளி ஒரு சாதாரண பழம் மட்டுமல்ல; அது முழுமையான ஆரோக்கியத்தை வழங்கும் ஒரு இயற்கை மருந்தாகவும் கருதப்படுகிறது.

தகவல் : ***குளோரி.கே.எஸ், சி.பிரசாத், உதவி பேராசிரியர்கள் (மண் அறிவியல் மற்றும் வேளாண் வேதியியல் துறை) கிருஷ்ணா வேளாண்மை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி, உசிலம்பட்டி, மதுரை மாவட்டம்.***



# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# விதைகளை பரிசோதிக்க விவசாயிகளுக்கு அழைப்பு

திருவண்ணாமலை, மார்ச் 30

திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் தங்களிடம் உள்ள விதைகளை விதைப்பிற்கு முன் விதைகளின் தரத்தினை பரிசோதனை செய்து கொள்ளலாம். விதைகளை பரிசோதனை செய்வதன் மூலம் இடுபொருட்கள் செலவினை குறைத்து தரமான விதைகளை பயன்படுத்தி அதிக மகசூல் பெற வேண்டும். குறைந்த செலவில் அதிக மகசூல் பெற விதைப் பரிசோதனை செய்த பின் விதைகளை பயன்படுத்துவதன் மூலம் விதைகளின் முளைப்பு திறன் குறைபாடு இல்லாமல் இருப்பதையும் விதைகளில் பிற இரக விதைகள் உள்ளதா என்பதை அறிவதன் மூலம் கலப்பு விதைகள் பயன்படுத்துவதை தவிர்க்கலாம். மேலும் விதையின் ஈரப்பதம் மற்றும் சுத்தத் தன்மை ஆகியவற்றை அறிந்து பயன்படுத்துவதன் மூலம் பயன் படுத்தும் விதைகள் முளைக்க தரமானதா என்பதை தெரிந்து கொள்ளலாம்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அரசு விதைப்பரிசோதனை நிலையத்தில் விவசாய பெருமக்கள் தங்களிடம் உள்ள விதைகளை அனுப்பி அவற்றின் ஈரப்பதம், பிற இரக கலவன், முளைப்புத்திறன், புறத்தூய்மை மற்றும் பூச்சி நோய் தாக்குதல் ஆகியவனவற்றை பரிசோதனை செய்து அதன் பின்பு விதைப்பு செய்து அதிக மகசூல் பெற்று கூடுதல் லாபம் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

விதை மாதிரிகளை நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம். விதைகளை அனுப்பும் போது பயிரின் பெயர், இரகம் மற்றும் குவியல் எண் ஆகியவை குறிப்பிட்ட விண்ணப்ப படிவத்துடன் ஒரு மாதிரிக்கு ரூபாய் 80/- வீதம் விதைப் பரிசோதனைக் கட்டணம் சேர்த்து அனுப்புதல் வேண்டும்.

விதை மாதிரிகளை மூத்த வேளாண்மை அலுவலர், விதைப் பரிசோதனை நிலையம், டாங்காப் கட்டிடம், வேங்கிக்கால், திருவண்ணாமலை 606 604 என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

# கோடை மழை வர வாய்ப்புள்ளதால் விளைந்துள்ள நெல் பயிரினை அறுவடை செய்திட விவசாயிகளுக்கு வேண்டுகோள்

மதுரை, மார்ச் 30

கோடை மழை வர வாய்ப்புள்ளதால் விளைந்துள்ள நெல் பயிரினை அறுவடை செய்திட வேண்டும்.

மதுரை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் முருகேசன் இது குறித்து விடுத்துள்ள அறிக்கையில், மதுரை மாவட்டத்தில் வரும் ஏப்ரல் 2 முதல் 5 வரை கோடை மழை பெய்திட வாய்ப்புள்ள காரணத்தால் தற்போது நன்கு விளைந்துள்ள நெல் பயிரினை உடனடியாக அறுவடை செய்திட விவசாயிகள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மதுரை மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெல் அறு வடைப் பணி தற்போது நடைப்பெற்று வருகிறது. மாவட்டத்தில் வரும் வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் கோடை மழை வர வாய்ப்பு உள்ள காரணத்தால் விவசாயிகள் நன்கு விளைந்துள்ள நெல் பயிரினை அறுவடை உடனடியாக செய்திட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

நெல் அறுவடைக்கு பின்பு கோடை நெல் சாகுபடி செய்திடும் விவசாயிகளுக்கு தேவைப்படும் நெல், விதைகள், உரங்கள் இருப்பு உள்ளதாகவும் விவசாயிகள் வாங்கி பயன்பெற கேட்டுக் கெண்டார்.

மாவட்டத்தில் தற்போது யூரியா 3815 மெ.டன், டி.ஏ.பி 1041 மெ.டன், பொட்டாஸ் 603 மெ.டன், காம்ப்ளக்ஸ் 3792 மெ.டன் இருப்பு உள்ளதாக தெரிவித்தார். மாவட்டத்தில் விவசாயிகளுக்கு தேவைப்படும் உரங்கள் வழங்கப்பட்டு வருவதை அதிகாரிகள் தொடர்ந்து ஆய்வு செய்து வருகின்றனர். மதுரை வேளாண்மை உதவி இயக்குநர் தரக் கட்டுப்பாடு கோ.பரமேஸ்வரன், அலங்கா நல்லூர், வாடிப்பட்டி, சோழவந்தான், சமயநல்லூர் பகுதிகளில் உரம் விநியோகம் தொடர்பாக ஆய்வு செய்தார்.

விவசாயிகள் ஆதார் கட்டாயம் எடுத்து சென்று POS பில் பெற்று மட்டும் அரசு வழங்கும் மானிய உரங்களை பெற்று செல்ல கேட்டுக் கொண்டுள்ளார்.

# விவசாய நிலங்களில் நீர் சேமிப்பிற்காக பண்ணை குட்டை அமைப்பது எப்படி ?



பண்ணை குட்டை என்பது விவசாய நிலங்களில் மழை நீரைச் சேமிக்கவும், நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தவும், பாசனத் தேவைகளுக்காகவும் அமைக்கப்படும் ஒரு சிறிய நீர்நிலை அமைப்பாகும். இது அதிகப்படியான மழை நீரைச் சேமித்து, வறட்சி காலங்களில் பயிர்களுக்குத் தண்ணீர் பாய்ச்சவும், மீன் வளர்ப்பு, கால்நடைத் தீவனம் மற்றும் பூச்சிக்கொல்லி தெளித்தல் போன்ற பணிகளுக்கும் உதவுகிறது.

## நீர் சேமிப்பிற்காக பண்ணை குட்டை / பண்ணைக் குளம் அமைப்பது எப்படி ?

ஒரு சிறந்த பண்ணைக் குளம் தோண்டுவதற்கு, இயற்கையாகவே தாழ்வான, களிமண் நிறைந்த நீர் வழிப்பாதை அல்லது மழைநீர் தேங்கும் பகுதியைத் தேர்வு செய்ய வேண்டும். நிலத்தின் பரப்பளவு மற்றும் தேவைக்கேற்ப, தகுந்த ஆழம் மற்றும் வடிவத்தில் குட்டை தோண்டப்பட வேண்டும். சரியான சரிவு மற்றும் ஆழத்திற்கு ஏற்ப வடிவமைத்து, பொதுவாக மழைக் காலத்திற்குப் பிறகு, அகழ்வுப் பணிகளுக்காக எக்ஸ்கவேட்டர் அல்லது புல்டோசர் போன்ற கனரக இயந்திரங்களைப் பயன்படுத்த வேண்டும். தேவைப்படும் அளவில் குழி தோண்டி, நான்கு பக்கமும் சரிவாக அமைக்க வேண்டும். அகற்றப்படும் மண்ணின் ஒரு பகுதியை, குளத்தைச் சுற்றி ஒரு மண் வரப்பு அமைக்கப் பயன்படுத்தலாம்.

அந்த வரப்பில், நிலைத்தன்மைக்காக மரங்களும் புற்களும் நடப்பட வேண்டும். நீர் கசிவைத் தடுக்க பாலித்தீன் உறைகள் அல்லது சுட்டச் செங்கல், கற்கள் கொண்டு பூச்சு செய்யலாம். நீடித்த உழைப்புக்காக ஷீா தடுப்பு திறன் கொண்ட HDPE 300

முதல் 500 மைக்ரான் தடிமன் கொண்ட தார்பாய் சிறந்தவை. இந்த தார்ப்பாய்கள் தண்ணீரை வீணாக்காமல், நீர் கசிவைத் தடுத்து, மீன் வளர்ப்பு மற்றும் நீர்ப்பாசனத்திற்கு உதவுகின்றன. தார்ப்பாய் போடுவதற்கு முன், குட்டையின் அடியில் கூர்மை யான கற்கள் இல்லாதவாறு பார்த்து, மணல் அல்லது தென்னை நார் பரப்புவது நல்லது. தார்ப்பாயை சமமாக விரித்து, ஓரங்களை மண்ணால் மூடி பலப்படுத்த வேண்டும். கால்நடைகள் அல்லது பராமரிப்புப் பணிகளுக்காக குளத்திற்கு பாதுகாப்பான, ஆழமற்ற மற்றும் செங்குத்தற்ற நுழைவாயில் இருப்பதை உறுதிசெய்ய வேண்டும்.



## பண்ணை குட்டை அளவு



பண்ணை குட்டை அமைப்பது மிகவும் எளிதானது. பொக் லைன் இயந்திரத்தின் மூலம் குழி பறிக்கும் பொழுது, நிலைத் தன்மைக்காகக் குளத்தின் பக்கங்கள் சரிவாக இருக்க வேண்டும். நான்கு அடி ஆழத்திற்கு குழி பறித்து அந்த எடுத்த மணலையே மேற்புறம் நான்கு புறமும் அடுக்கினால், ஏறக்குறைய ஆறு அடி ஆழமுள்ள பண்ணை குட்டை கிடைக்கும். பண்ணை குட்டை பொதுவாக 20 மீ. x 20 மீ. x 3 மீ. (நீளம் x அகலம் x ஆழம்) என்ற அளவில், சுமார் 1.5 முதல் 2 மீட்டர் ஆழத்தில் அமைக்கப் படுகிறது. சிறிய நிலங்களில், 15x15x3 மீ அல்லது 10x10x3 மீ அளவிலும் அமைத்து, பயன்படுத்தலாம். இந்த அளவு சுமார் 5 லட்சம் லிட்டர் வரை மழை நீரைச் சேமிக்க உதவும். உதாரண மாக 21 அடி நீளம் 21 அடி அகலம் 6 அடி உயரம் உள்ள பண்ணை குட்டையின் கொள்ளளவு 74,926 லிட்டர் ((எழுபத்து நான்காயிரத்து தொள்ளாயிரத்து இருபத்தி ஆறு லிட்டர்)ஆகும். 45 அடி நீளம், 45 அடி அகலம் மற்றும் 9 அடி உயரம் கொண்ட குட்டை சுமார் 516075 லிட்டர் தண்ணீரைச் சேமிக்க முடியும். ஆகவே மிகச் சுலபமாக பண்ணை குட்டையின் கொள்ளளவு தெரிந்து கொள்வதற்கு அதன் நீளம் x அகலம் x உயரம், கணக்கிடும் பொழுது வருவது மொத்த கன அடி. ஒரு கன அடிக்கு 28.31 லிட்டர் தண்ணீர் கொள்ளும். எனவே அதற்கு ஏற்றவாறு கணக்கிட்டு பண்ணை குட்டையின் கொள்ளளவை முடிவு செய்து கொள்ளவும். களிமண் நிலம் நீர் கசிவைத் தடுக்கும். மணல் பாங்கான நிலமாக இருந்தால், பாலித்தீன் ஷீட் (LDPE – 300 மிலி 500 GSM) விரிப்பது அவசியம். குளத்திற்கு, மண் அரிப்பைத் தடுப்பதற்காகப் பாறைகளால் வரிசைப்படுத்தப் பட்ட வழிந்தோடும் நீருக்கான நுழைவாயில், வழிந்தோடும் நீருக்கான வெளியேறும் வழி மற்றும் பாதுகாப்பு வேலி ஆகியவை கட்டாயம் அடங்கியிருக்க வேண்டும். ஒரு பண்ணை குளம் ஆண்டின் 80 சதவீத காலத்திற்கு நீரைத் தக்கவைத்துக் கொண்டால், அது மீன் வளர்ப்பிற்கும் பயன்படுத்தப்படலாம். 1 ஏக்கர் பரப்பளவிற்கு மீன் வளர்ப்புக்குக் குட்டை அமைத்தால், அதிகபட்சமாக 4,000 மீன் குஞ்சுகள் வரை வளர்க்கலாம்.

# பண்ணைக் குட்டை தார்ப்பாய்கள் பராமரிக்கும் முறைகள்

குட்டை தோண்டி முடித்த பொழுது, நான்கு புறமும் சரிவாக உள்ளவாறு அமைப்பது மிகவும் நல்லது. மண் சரியாமல் இருக்கும். முடிந்து வரை தேங்காய் நார், எம் சேண்டு போன்ற வற்றை போட்டு தரையை கூரான கற்கள் இல்லாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும் தண்ணீர் விட்டு நன்றாக திம்ஸ் கட்டை போட்டு மெத்தி விடவும். பொதுவாகவே கருப்பு நிறம் கொண்ட தார்பாய்கள் மற்ற நிறங்களில் உள்ள தார்ப்பாய்களை விட சில மாதங்கள் கூடவே உழைக்கிறது . எனவே தங்களது பட்ஜெட்க்கு ஏற்றவாறு தார்பாலின்களை தேர்வு செய்து கொள்ளவும். அதிக ஜிஎஸ்எம் உள்ள தார்பாய்கள் அதிக வருடங்கள் உழைக்கும்.



பண்ணை குட்டைகளில் மீன் வளர்ப்பு, குறைந்த முதலீட்டில் ஆண்டுக்கு சுமார் 1.75 லட்சம் வரை வருமானம் தரும் ஒரு சிறந்த கூட்டு விவசாய முறையாகும். முறையான குட்டை தயாரிப்பு, கட்லா, ரோகு, மிர்கால் போன்ற வேகமாக வளரும் மீன் இனங்கள் மூலம் 6-8 மாதங்களில் நல்ல லாபம் ஈட்ட முடியும். ஒரே குட்டையில் கட்லா, ரோகு, மிர்கால், புல் கெண்டை வகையான மீன்களை கலந்து வளர்ப்பது அதிக மகசூல் தரும்.

ஏக்கருக்கு சுமார் 1,000 முதல் 1,500 வரை ஆரோக்கியமான மீன் குஞ்சுகளை இருப்பு செய்யலாம். 5-7 செ.மீ அளவுள்ள விரல் நீள மீன் குஞ்சுகள் சிறந்தது. அரிசித் தவிடு, கடலை புண்ணாக்கு, அல்லது கடைகளில் கிடைக்கும் துகள்களை காலை, மாலை இருவேளைகளிலும் உணவாக இட வேண்டும். 6 முதல் 8 மாதங்களில் மீன்கள் விற்பனைக்குத் தயாராகும்.

## பண்ணை குட்டையின் நன்மைகள்?

பண்ணைக் குளங்கள் மழை நீரைச் சேகரிக்கவும், பயிர் பன்முகத்தன்மையை ஊக்குவிக்கவும், காலநிலை மாற்றத் தாங்குதிறனை மேம்படுத்தவும், கால்நடைகளுக்கு ஆதர வளிக்கவும், மீன் வளர்ப்பை எளிதாக்கவும் உதவுகின்றன.

பயிர்களுக்குத் தேவையான அத்தியாவசிய நீரை உடனடியாக வழங்கி, பயிர் சாகுபடியை சாத்தியமாக்குகிறது. வறட்சி காலங்களில் பயிர்களுக்கு உயிர் நீர் பாய்ச்சலாம். நிலத்தடி நீரை நிரப்பி, மண் ஈரப்பதத்தை மேம்படுத்தலாம்.

இது மாடுகளுக்கு நீர் ஆதாரமாகவும், வணிக ரீதியான மீன் வளர்ப்புக்கான இடமாகவும் செயல்படுகிறது. மீன் வளர்ப்பு மற்றும் வாத்து வளர்ப்பு மூலம் கூடுதல் வருமானம் பெறலாம்.

## பண்ணை குட்டை மானியம்?



தமிழ்நாட்டில், வேளாண்மை மற்றும் தோட்டக் கலைத் துறை மூலம் பண்ணை குட்டை அமைக்க மானியம் வழங்கப்படுகிறது. மீன் வளர்ப்பு செய்வதற்கு, மீன் வளர்ப்பு துறை மூலம் பண்ணை குட்டை அமைக்க மானியம் வழங்கப்படுகிறது.

தகவல் தொகுப்பு : ***கா.அரிபுத்திரன், வேளாண்மை அலுவலர், உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம், விருதுநகர். ph: 82480 80922. Email : agriari@gmail.com.***



# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**